**அகில இந்திய மக்கள் அறிவியல் கூட்டமைப்பு( AIPSN ) வெனிசூலா நாட்டிற்கு எதிரான அமெரிக்காவின் நடவடிக்கையை வன்மையாக கண்டிக்கிறது...!**

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் நிர்வாகம், வெனிசூலா நாட்டின் ஜனாதிபதி நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியையும் கடத்தி கைது செய்திருப்பது வெளிப்படையான போர் நடவடிக்கையாகவும், ஏகாதிபத்திய அதிகாரத்தின் கொடூர வெளிப்பாடாகவும், மற்றொரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் சட்டவிரோதமான தலையீடாகவும் உள்ளது.
நிரூபிக்கப்படாத குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், ஒரு சுயசார்புள்ள நாட்டில் நுழைந்து, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு தலைவரை கைது செய்வது சர்வதேச சட்டத்தையும் ஐக்கிய நாடுகள் சபைச் சட்டப்பிரகடனையும் மிக மோசமாக மீறுவதாகும். மதுரோ கடத்தப்பட்டதற்குப் பிறகு வெனிசூலா நாட்டில் பொறுப்பேற்றுக்கொண்ட செயல் ஜனாதிபதி டெல்சி ரோட்ரிகஸ், "போதைப்பொருள் எதிர்ப்பு போர் என்பது ஒரு கண்துடைப்பு மட்டுமே, அமெரிக்காவின் உண்மையான இலக்கு ஆட்சி மாற்றமும், நாட்டின் ஆற்றல், கனிம மற்றும் இயற்கை வளங்களை கட்டுப்படுத்துவதுதான்" என்று கூறியுள்ளார். உலகிலேயே மிகப்பெரிய அளவில் எண்ணெய் கையிருப்புகள் வெனிசூலாவிடம் உள்ளன என்பதையும், அவற்றை அமெரிக்கா அபகரிக்க முயற்சிக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.
பிற நாடுகளின் சுயநிர்ணய உரிமை என்பது நவீன உலக அரங்கில் எந்தச் சூழலிலும் இழப்பதற்கு இடமில்லாத வகையில் அடிப்படை உரிமையாக இருக்க வேண்டும்.

வெனிசூலா அரசுக்கு எதிராக சுமத்தப்படும் போலிக் குற்றச்சாட்டுகள், ஈராக் மீது படையெடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட 'பெரும் அழிவுச் ஆயுதங்கள் வைத்திருப்பதாக சொன்ன அதே பொய் குற்றச்சாட்டை இப்போது நினைவூட்டுகின்றன. இதேபோல 1989ஆம் ஆண்டு மானுவல் நோரியேகாவை பிடிக்க அமெரிக்கா பனாமாவை படையெடுத்ததும் நினைவுக்கு வருகிறது. அமெரிக்காவுக்கு எதிராக போதைப்பொருள் மற்றும் ஆயுதப் போரை நடத்துகிறது என்ற வெனிசூலா நாட்டின் மீது வைக்கப்படும் குற்றச்சாட்டு முற்றிலும் கற்பனைக் கதையாகும். இதை நிரூபிக்கும் எந்த நம்பத்தகுந்த ஆதாரமும், எந்த சர்வதேச அமைப்பிலிருந்தோ, நீதித்துறை அமைப்பிலிருந்தோ, அல்லது அமெரிக்க அரசின் அதிகாரப்பூர்வ தரவுகளிலிருந்தோ வெளிவரவில்லை.

இந்த அநீதியான இராணுவ படையெடுப்பும் வெடிகுண்டுத் தாக்குதல்களையும் மேற்கொண்ட அமெரிக்காவின் நடவடிக்கைகள் ஒரு போர் குற்றமாகும் என AIPSN தெளிவாகவும் உறுதியாகவும் கண்டிக்கிறது. வெனிசூலாவுக்கு எதிரான இந்த குற்றச்செயல்கள், சமீப காலங்களில் ஏகாதிபத்ய அமெரிக்கா மற்றும் அதன் கூட்டாளிகள் இணைந்து ஈரான் மற்றும் காசா/பாலஸ்தீனில் நடத்திய முறைகேடான குண்டுவீச்சுகளின் ஒரு தொடர்ச்சியாகும். அமெரிக்காவின் இந்த நடவடிக்கைகள் உலகளாவிய போர் தீவிரமடையும் அபாயத்தை அதிகரிக்க செய்கிறது, முழு உலகத்திற்கும் கணிக்க முடியாத விளைவுகளை ஏற்படுத்தும். இந்த அமெரிக்க ஏகாதிபத்ய தலையீட்டுக்கு எதிராக, மிகப் பெரிய சவால்களை

எதிர்கொண்டு தங்கள் நாட்டை பாதுகாக்கப் போராடும் வெனிசுலா மக்களின் போராட்டத்துடன் நாம் நிற்கிறோம்; அவர்களை ஆதரிக்கிறோம்.

வெனிசூலாவுக்கு எதிரான அமெரிக்கத் தாக்குதலை எதிர்த்து, பொதுமக்கள் போராட்டங்களை நடத்துமாறு AIPSN அதன் கூட்டமைப்பில் உள்ள இயக்கங்களுக்கு அழைப்பு விடுக்கிறது.

Translated from English by Moses TNSF

#AIPSN

Fb
https://www.facebook.com/theAIPSN?mibextid=kFxxJD

Insta
https://www.instagram.com/aipsnmedia?igsh=dGRibjE1ZDQ4bW1I

Website. https://aipsn.net

Twitter  @gsaipsn